DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 239/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு.அந்தோணி சவரிமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதின்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 08.02.2015 அன்று காவல்நிலையக்குற்ற எண்.24/2015 ச/பி.457, 380 இதச ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இடத்திற்கு 12.30 மணிக்கு சென்று சாட்சிகள் முப்பிடாதி, பிச்சையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ 7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் சாட்சிகள் முருகேசன், வாசுகி, கருப்பையா, சிவனு என்ற அய்யாத்துரை, சிவலட்சுமி, கஸ்தூரி, முப்பிடாதி, பிச்சையா மற்றும் இவ்வழக்கு பதிவுசெய்த தங்கதுரை ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது

வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அதன்பின்பு குடும்பத்தார் மற்றும் சந்தேகம் உள்ள நபர்களின் கைரேகையை பதிவுசெய்து அந்த ரேகைகளை திருநெல்வேலி விரல்ரேகை ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பினேன். 13.02.2015 அன்று வாசுகியின் தொலைபேசி எண்ணிற்கான Call Details யை திருநெல்வேலி காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் பெற்று விசாரணை செய்தேன். 26.02.2015 அன்று மாதிரிக்குற்றவாளிகளை தணிக்கை செய்து வந்த காவலர் செந்தில்குமார் அவர்களை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். திருநெல்வேலி விரல்ரேகை ஆய்வுக்கூடத்தின் ஆய்வாளர் ராஜய்யன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 02.04.2016 ம் தேதி அச்சன்புதூர் காவல்நிலைய வழக்கில் கைதாகிய எதிரி அங்கு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கை பற்றி தெரிவித்ததால் சங்கரன்கோவில் தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் மூலம் போலீஸ் காவலுக்கு பெற்று எதிரியிடம் வழக்கு பற்றி கேட்டபோது அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததால் அன்றைய தினம் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் வைத்து மதியம் 3.30 மணிக்கு எதிரி கைது செய்யப்பட்டார். கைது செய்த எதிரியை சங்கரன்கோவில் நீதி்த்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு தக்க வழிக்காவலுடன் அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே இவ்வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக சங்கரன்கோவில் தாலுகா வட்ட காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக அவர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.ஆ.1 புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மூக்கம்மாள் மற்றும்புஷ்பம் ஆகியோரிடம் இவ்வழக்கின் சம்பவம் பற்றி விசாரணை நடத்தினேனா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் கூறிய சாட்சிகள் எவரையும் இவ்வழக்கிற்காக விசாரிக்கவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக அவர்களை விசாரித்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அந்த சாட்சிகள் புகார்தாரரின் உறவினர்கள் என்றாலும், அதனால் அவர்களை முறையாக விசாரிக்காமல் வழக்கில் சாட்சியாக

சேர்த்துள்ளேன் என்றாலும், என்னுடைய விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**